# அரியலூர் நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| அரியலூர் நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் 13.01.2021ம் தேதி புதன்கிழமை காலை 11.00மணிக்கு தனிஅலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும். அது தொடர்பான கீழ்கண்ட பொருள்கள் பரிசீலினைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. | | | |
| 13.01.2021 | 01 | பொருள் எண். 01<br>நகராட்சியின் கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ள ஆண்டு குத்தகை இனங்களை 01.04.2021 முதல் 31.03.2024 வரை மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலும் கோருவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப் பட்டது |

| வ. எண் | ஏல இனத்தின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலப்பொறுப்பு தொகை தனித் தனியாக. | சொத்து மதிப்பு சான்றிதழ் 01.01.2021க்கு பின்னர் பெற்றதாக இருக்க வேண்டும் | சொத்து மதிப்பு சான்றிதழ் இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்பு தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.5,00,000/- | ரூ.10,00,000/- | ரூ.5,00,000/- |
| 2 | பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிவறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.1,00,000/- | ரூ.2,00,000/- | ரூ.1,00,000/- |
| 3 | பேருந்து நிலையத்தில் தெற்குப்புறம் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.1,00,000/- | ரூ.2,00,000/- | ரூ.1,00,000/- |
| 4 | வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (ஆடு, மாடுகள் மட்டும்) வாரச்சந்தையின் உட்புற கடைகள் உட்பட (வெளிக்கடைகள் 1 முதல் 13 நீங்கலாக) | ரூ.10,00,000/- | ரூ.20,00,000/- | ரூ.5,00,000/- |
| 5 | தினசரி மார்க்கெட்டில் தலைச்சுமை சுங்கம் வசூல் செய்யும உரிமம் | ரூ.1,00,000/- | ரூ.2,00,000/- | ரூ.1,00,000/- |
| 6 | பள்ளி ஏரியில் மீன்பிடித்துக் கொள்ளும் உரிமம் | ரூ.30,000/- | ரூ.1,00,000/- | ரூ.30,000/- |
| 7 | ஐயப்பன் ஏரியில் மீன்பிடித்துக் கொள்ளும் உரிமம் | ரூ.30,000/- | ரூ.1,00,000/- | ரூ.30,000/- |
| 8 | செட்டி ஏரியில் மீன்பிடித்துக் கொள்ளும் உரிமம் | ரூ.30,000/- | ரூ.1,00,000/- | ரூ.30,000/- |
| 9 | பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சிப்பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமம் | ரூ.50,000/- | ரூ.1,00,000/- | ரூ.50,000/- |
| 10 | பேருந்து நிலையத்தில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்யும் உரிமம் | ரூ.5,000/- | ரூ.50,000/- | ரூ.5,000/- |
| 11 | பேருந்து நிலையத்தில் எடை மிஷின் வைத்துக்கொள்ளும் உரிமம் | ரூ.5,000/- | ரூ.50,000/- | ரூ.5,000/- |
| 12 | அரியலூர் நகர எல்லைக்குள் நுழையும் சரக்கு வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.10,00,000/- | ரூ.10,00,000/- | ரூ.5,00,000/- |
| 13 | தினசரி மார்க்கெட்டில் உள்ள கட்டணக்கழிவறை வசூல் செய்யும் உரிமம் | ரூ.1,00,000/- | ரூ.2,00,000/- | ரூ.1,00,000/- |
| 14 | தினசரி காந்தி மார்க்கெட்டில் கட்டண கழிவறை அருகில் உள்ள அறை எண்.01 | ரூ.25,000/- | ரூ.50,000/- | ரூ.25,000/- |
| 15 | தினசரி காந்தி மார்க்கெட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடை எண்.04 | ரூ.25,000/- | ரூ.1,00,000/- | ரூ.25,000/- |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td><u>அலுவலகக்குறிப்பு</u><br>1. ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் விடுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்கண்டுள்ள குத்தகை இனங்கள் பொது ஏலத்தில் விடுவதற்கு தினசரி நாளிதழில் ஒரு நாள் விளம்பரம் செய்வதற்கும், அதற்கான செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.<br>மேற்கண்ட குத்தகை இனங்கள் தொடர்பாக குத்தகை இனங்கள் ஏல விபரம் பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் பற்றிய அறிக்கையினை 150 எண்ணிக்கையில் அச்சடித்து தயார் செய்வதற்கு ஆகும் செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>13.01.2021</td>
<td>02</td>
<td><u>பொருள் எண். 02</u><br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தூய்மை பணியாளர்களுக்கு மழை அங்கிகள், கையுறைகள், கம்பூட்ஸ் மற்றும் முகக்கவசங்கள் ஆகியவை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான SIDCO நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.3,85,980/-னை கார்த்திகா எண்டர்பிரைசஸ், சென்னை என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>1. மேற்காணும் பட்டியல் தொகையினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிவர் புயல் நிதியிலிருந்து வழங்கலாம்.<br>2. மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>13.01.2021</td>
<td>03</td>
<td><u>பொருள் எண். 03</u><br>அரியலூர் நகராட்சி உட்பட்ட புரட்சித்தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத்திட்டம் ஊரகம் மற்றும் நகர்புற பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் கூடுதல் விவரங்களை கணக்கெடுப்பதற்கு உரிய வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை எண்.170, நாள்.27.10.2020 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12635/2020/UPA3-1, நாள்.28,08,2020ன்படி கணக்கெடுப்பு பணியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசாணையில் அறிவித்துள்ளப்படி ஒரு விண்ணபத்திற்கு ரூ.5/- வீதம் 2846 விண்ணபத்திற்கு 14220/- கவிக்குயில் என்ற சுய நிதி குழுவிற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>பணியின் அவசியம் அவசரம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>13.01.2021</td>
<td>04</td>
<td><u>பொருள் எண். 04</u><br>அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் வலுவிழந்துள்ள கட்டிடப்பகுதி இடிக்கப்பட்டதால், பொது மக்கள் நலன் கருதி பேருந்து நிலையத்தின் வடக்கு பகுதியில் தற்காலிக காத்திருப்பு கூடம் ரூ.5.00 இலட்சத்திற்கு அமைக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.385, நாள்.13.11.2020 அன்று ஒப்புதல் பெறப்பட்டுள்ளதின்படி, 21.12.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.பிரேம்குமார், வெங்கடராமபுரம்</td><td>1.26% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கணேசன், வெங்கடராமபுரம்</td><td>0.95% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.26% குறைவாக கொடுத்த திரு.பிரேம்குமார், வெங்கடராமபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.<br>2. பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதால் தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>13.01.2021</td>
<td>05</td>
<td>
<u>பொருள் எண். 05</u><br>
அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் வலுவிழந்துள்ள கட்டிடப்பகுதி இடிக்கப்பட்டதால், பொது மக்கள் நலன் கருதி பேருந்து நிலையத்தின் தெற்கு பகுதியில் தற்காலிக காத்திருப்பு கூடம் ரூ.10.00 இலட்சத்திற்கு அமைக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.386, நாள்.13.11.2020 அன்று ஒப்புதல் பெறப்பட்டுள்ளதின்படி, 21.12.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.பிரேம்குமார், வெங்கடராமபுரம்</td><td>1.70% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கணேசன், வெங்கடராமபுரம்</td><td>1.25% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.70% குறைவாக கொடுத்த திரு.பிரேம்குமார், வெங்கடராமபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.<br>
2. பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதால் தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>13.01.2021</td>
<td>06</td>
<td>
<u>பொருள் எண். 06</u><br>
அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.03 பெரம்பலூர் சாலையில் கட்டப்பட்டுள்ள நவீன எரிவாயு தகன மேடையில் அணுகு சாலை வசதி இல்லாததால், WMM கிராவல் கொண்டு அணுகு சாலை ரூ.6.00 இலட்சத்திற்கு அமைக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.391, நாள்.13.11.2020 அன்று ஒப்புதல் பெறப்பட்டுள்ளதின்படி, 21.12.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.பிரேம்குமார், வெங்கடராமபுரம்</td><td>1.62% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கணேசன், வெங்கடராமபுரம்</td><td>1.00% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.62% குறைவாக கொடுத்த திரு.பிரேம்குமார், வெங்கடராமபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>13.01.2021</td>
<td>07</td>
<td>
<u>பொருள் எண். 07</u><br>
அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தின் பயணிகள் நிற்கும் இடமான கட்டிட பகுதி மிகவும் பழுதடைந்துள்ளதை, 11.10.2020 அன்று இடித்து அப்புறப்படுத்தப்பட்டது. பொதுமக்கள் நலன் கருதி தற்காலிகமாக இரண்டு இடங்களில் நிழற்குடைகள் வாடகை அடிப்படையில் ரூ.9.00 இலட்சத்திற்கு அமைக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.393, நாள்.13.11.2020 அன்று ஒப்புதல் பெறப்பட்டுள்ளதின்படி, 21.12.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.பிரேம்குமார், வெங்கடராமபுரம்</td><td>1.81% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கணேசன், வெங்கடராமபுரம்</td><td>0.90% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.81% குறைவாக கொடுத்த திரு.பிரேம்குமார், வெங்கடராமபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td>13.01.2021</td><td>08</td><td>
<u>பொருள் எண். 08</u><br>
அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மோட்டார்கள் பழுது ஏற்பட்டுள்ளதால், அதனை ரூ.9.90 இலட்சத்திற்கு சரி செய்ய இந்நகர்மன்ற தீர்மானம் எண்.381, நாள்.13.11.2020 அன்று ஒப்புதல் பெறப்பட்டுள்ளதின்படி, 24.12.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.சுதாகர், வி.கைகாட்டி</td><td>1.33% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.இராமலிங்கம், அரியலூர்</td><td>4.58% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.33% குறைவாக கொடுத்த திரு.சுதாகர், வி.கைகாட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13.01.2021</td><td>09</td><td>
<u>பொருள் எண். 09</u><br>
அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 அம்பேத்கார் தெருவில் உள்ள கழிவறையில் புணரமைப்பு பணிகள் ரூ.1.75 இலட்சத்திற்கு சரி செய்ய இந்நகர்மன்ற தீர்மானம் எண்.388, நாள்.13.11.2020 அன்று ஒப்புதல் பெறப்பட்டுள்ளதின்படி, 24.12.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.சுதாகர், வி.கைகாட்டி</td><td>0.55% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.இராமலிங்கம், அரியலூர்</td><td>1.30% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.30% குறைவாக கொடுத்த திரு.இராமலிங்கம், அரியலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13.01.2021</td><td>10</td><td>
<u>பொருள் எண். 10</u><br>
அரியலூர் நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்திற்கு குடிநீர் வசதி மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு மற்றும் புதிதாக கட்டப்பட்டுள்ள நவீன எரிவாயு தகன மேடை கட்டிடத்திற்கு குடிநீர் வசதி மற்றும் மின்வசதிகள் ரூ.6.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.392, நாள்.13.11.2020 அன்று ஒப்புதல் பெறப்பட்டுள்ளதின்படி, 24.12.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.சுதாகர், வி.கைகாட்டி</td><td>1.45% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.இராமலிங்கம், அரியலூர்</td><td>0.25% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.45% குறைவாக கொடுத்த திரு.சுதாகர், வி.கைகாட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13.01.2021</td><td>11</td><td>
<u>பொருள் எண். 11</u><br>
அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகிக்கும் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வரும் பிரதான குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை ரூ.9.90 இலட்சத்திற்கு சரி செய்ய இந்நகர்மன்ற தீர்மானம் எண்.394, நாள்.13.11.2020 அன்று ஒப்புதல் பெறப்பட்டுள்ளதின்படி, 24.12.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.சுதாகர், வி.கைகாட்டி</td><td>1.14% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.இராமலிங்கம், அரியலூர்</td><td>4.15% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td><u>அலுவலகக்குறிப்பு</u><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.14% குறைவாக கொடுத்த திரு.சுதாகர், வி.கைகாட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.</td><td></td></tr>
<tr><td>13.01.2021</td><td>12</td><td><u>பொருள் எண். 12</u><br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கழிப்பிடத்தில் உள்ள ஆழ்குழாய் மோட்டார்கள் மற்றும் சிறுமின் விசைப்பம்பு ஆழ்குழாய் மோட்டார் மற்றும் அலுவலக மோட்டார் ஆகிய மோட்டார் மற்றும் பம்புகள் பழுதடைவதால் அவற்றை ரூ.10.00 இலட்சத்திற்கு உடன் சரி செய்யும் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.397, நாள்.13.11.2020 அன்று ஒப்புதல் பெறப்பட்டுள்ளதின்படி, 24.12.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.சுதாகர், வி.கைகாட்டி</td><td>4.08% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.இராமலிங்கம், அரியலூர்</td><td>1.11% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.11% குறைவாக கொடுத்த திரு.இராமலிங்கம், அரியலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13.01.2021</td><td>13</td><td><u>பொருள் எண். 13</u><br>அரியலூர் நகராட்சியின் மூலம் மாவட்ட விளையாட்டு அரங்கில் 26.01.2021 அன்று கொண்டாடப்படவுள்ள குடியரசு தினவிழா கொண்டாட்ட நிகழ்ச்சிக்கான முன்னேற்பாட்டு பணிகளான மரக்கன்று நடுதல், பூந்தொட்டி வைத்தல், சிவப்பு கம்பளம் விரிப்பு, மைக்செட், தளவாட சாமான்கள், சாமியானா, குடிநீர் விநியோகம், கழிவறை வசதி, வரவேற்பு பேனர், விழாப்பேனர் வைத்தல் மற்றும் சமாதானப்புறா பறக்க விடுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13.01.2021</td><td>14</td><td><u>பொருள் எண். 14</u><br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21976/2020/இ2, நாள்.10.12.2020ன் நிர்வாக அனுமதியின்படி அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நிவர் புயல் மற்றும் மழையினால் தார் சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலைகளில் சேதமடைந்து குண்டு குழியுமாக உள்ள சாலைகளை மாநில பேரிடர் மேலாண்மை நிதி 2020-21ன் கீழ் வார்டு எண்.03, 04, 05, 06, 07, 09, 10, 12, 15, 16 மற்றும் 17 ஆகிய வார்டுகளில் உள்ள தெருக்களில் பழுதடைந்த சாலைகளை சிமெண்ட் கான்கிரீட் மூலம் மராமத்து பணிகள் மேற்கொள்ள 30.12.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.வி.ஹரிகிருஷ்ணன், அரியலூர்</td><td>1.02% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.A.சுதாகர், அரியலூர்</td><td>4.46% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.02% குறைவாக கொடுத்த திரு.வி.ஹரிகிருஷ்ணன், அரியலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13.01.2021</td><td>15</td><td><u>பொருள் எண். 15</u><br>அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து இந்நகராட்சி வரையுள்ள குடிநீர் விநியோக பிரதான குழாயில் பொருத்தப்பட்டுள்ள ஏர்வால்வு, ஸ்கர்வு வால்வு வேலை செய்யாததால் பிரதான குழாயில் உடைப்பு ஏற்படும் சமயம் குடிநீரை வெளியேற்றிய பிறகு தான் பணி செய்ய வேண்டியுள்ளது. அவ்வாறு இயக்கப்படும் போது மேற்கண்ட</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
வால்வுகள் பழுதடைந்துள்ளதால் உடைப்பு சரி செய்வதில் தொய்வு ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட ஏர் வால்வு, ஸ்கர்வு வால்வும், வழியோக கிராமங்களில் வழங்கப்படும் குடிநீரின் அளவை கணக்கிடுவதற்கு கட்டுப்பாட்டு மீட்டர் ஆகியவைகளை கொள்முதல் செய்யவும், அண்ணாசிலை முதல் உழவர் சந்தை மற்றும் MGR நகர் வரை குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணிகள் 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.404, நாள்.11.12.2020 அன்று ஒப்புதல் பெறப்பட்டதின்படி 05.01.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>M/s. SPT & CO, Contractor, Perambalur</td><td>4.81% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>Thiru.Ramkumar, Contractor, Perambalur</td><td>6.90% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. SPT & CO, Contractor, Perambalur என்ற நிறுவனம் மதிப்பீட்டை விட 4.81% அதிகமாகவும், Thiru.Ramkumar, Contractor, Chennai என்ற நிறுவனம் மதிப்பீட்டை விட 6.90% அதிகமாகவும் கொடுத்துள்ளனர். எனவே, குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி குறைத்து கொடுக்க இந்நகராட்சியின் மூலம் விலைக்குறிப்பு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால், கூலி ஆட்கள் ஊதிய உயர்வாலும், கட்டுமானப்பொருட்களின் விலை உயர்வாலும் M/s. SPT & CO, Contractor, Perambalur என்ற நிறுவனம் 4.81% (அதிகம்) கீழ் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை குறைத்து கொடுக்க இயலாது என கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்கள்.<br>
2. மேலும், பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலவிரயம் மற்றும் கூடுதல் செலவினத்தை தவிர்த்திடவும், கூடுதல் செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3. M/s. SPT & CO, Contractor, Perambalur என்ற நிறுவனம் 4.82% ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>13.01.2021</td>
<td>16</td>
<td>
<u>பொருள் எண். 16</u><br>
அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான கல்லூரி வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியின் சுற்றுச்சுவர் இடிந்து விட்டதால், புதிய சுற்றுச்சுவர் 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.405, நாள்.11.12.2020 அன்று ஒப்புதல் பெறப்பட்டதின்படி 05.01.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.வி.ஹரிகிருஷ்ணன், அரியலூர்</td><td>4.56% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.A.சுதாகர், அரியலூர்</td><td>6.45% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.வி.ஹரிகிருஷ்ணன், அரியலூர் என்பவர் மதிப்பீட்டை விட 4.56% அதிகமாகவும், திரு.A.சுதாகர், அரியலூர் என்பவர் மதிப்பீட்டை விட 6.90% அதிகமாகவும் கொடுத்துள்ளனர். எனவே, குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி குறைத்து கொடுக்க இந்நகராட்சியின் மூலம் விலைக்குறிப்பு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால், கூலி ஆட்கள் ஊதிய உயர்வாலும், கட்டுமானப்பொருட்களின் விலை உயர்வாலும் திரு.வி.ஹரிகிருஷ்ணன், அரியலூர் என்பவர் 4.56% (அதிகம்) கீழ் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை குறைத்து கொடுக்க இயலாது என கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்கள்.<br>
2. மேலும், பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலவிரயம் மற்றும் கூடுதல்
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>செலவினத்தை தவிர்த்திடவும், கூடுதல் செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. திரு.வி.ஹரிகிருஷ்ணன், அரியலூர் என்ற நிறுவனம் 4.56% ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.</td><td></td></tr>
<tr><td>13.01.2021</td><td>17</td><td><u>பொருள் எண். 17</u><br>அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்தில் பழைய மற்றும் புதிய கூட்டு குடிநீர் திட்டத்தில் செயல்படும் 50HP மின்மோட்டார் அடிக்கடி பழுது ஏற்படுவதாலும், அதனை சரி செய்யும் நேரங்களில் குடிநீர் விநியோகம் செய்வதில் தொய்வு ஏற்படுவதை சரி செய்திட புதிய 50HP மின் மோட்டாரினை 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.406, நாள்.11.12.2020 அன்று ஒப்புதல் பெறப்பட்டதின்படி 05.01.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.சுதாகர், வி.கைகாட்டி</td><td>4.95% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.இராமலிங்கம், அரியலூர்</td><td>7.90% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.இராமலிங்கம், அரியலூர் என்பவர் மதிப்பீட்டை விட 7.90% அதிகமாகவும், திரு.A.சுதாகர், அரியலூர் என்பவர் மதிப்பீட்டை விட 4.95% அதிகமாகவும் கொடுத்துள்ளனர். எனவே, குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி குறைத்து கொடுக்க இந்நகராட்சியின் மூலம் விலைக்குறிப்பு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால், கூலி ஆட்கள் ஊதிய உயர்வாலும், கட்டுமானப்பொருட்களின் விலை உயர்வாலும் திரு.A.சுதாகர், அரியலூர் என்பவர் 4.95% (அதிகம்) கீழ் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை குறைத்து கொடுக்க இயலாது என கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்கள்.<br>2. மேலும், பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலவிரயம் மற்றும் கூடுதல் செலவினத்தை தவிர்த்திடவும், கூடுதல் செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. திரு.A.சுதாகர், அரியலூர் என்பவர் 4.95% ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13.01.2021</td><td>18</td><td><u>பொருள் எண். 18</u><br>அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்தில் 200KVA டிரான்ஸ்பார்மர் 2012ம் ஆண்டு பொருத்தப்பட்டுள்ளது. தற்போது கூடுதல் மின்சுமை பயன்படுத்தப்படுவதால் 200KVA டிரான்ஸ்பார்மருக்கு மாற்றாக 250KVA டிரான்ஸ்பார்மர் 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.407, நாள்.11.12.2020 அன்று ஒப்புதல் பெறப்பட்டதின்படி 05.01.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.சுதாகர், வி.கைகாட்டி</td><td>4.70% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.இராமலிங்கம், அரியலூர்</td><td>5.90% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.இராமலிங்கம், அரியலூர் என்பவர் மதிப்பீட்டை விட 5.90% அதிகமாகவும், திரு.A.சுதாகர், அரியலூர் என்பவர் மதிப்பீட்டை விட 4.70% அதிகமாகவும் கொடுத்துள்ளனர். எனவே, குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி குறைத்து கொடுக்க இந்நகராட்சியின் மூலம் விலைக்குறிப்பு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால், கூலி ஆட்கள் ஊதிய உயர்வாலும், கட்டுமானப்பொருட்களின் விலை உயர்வாலும் திரு.A.சுதாகர், அரியலூர் என்பவர் 4.70% (அதிகம்) கீழ் ஒப்பந்தப்புள்ளி</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | விலை விகிதத்தினை குறைத்து கொடுக்க இயலாது என கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்கள்.<br>2. மேலும், பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலவிரயம் மற்றும் கூடுதல் செலவினத்தை தவிர்த்திடவும், கூடுதல் செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. திரு.A.சுதாகர், அரியலூர் என்பவர் 4.70% ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். | |
| 13.01.2021 | 19 | <u>பொருள் எண். 19</u><br>இந்நகராட்சி பேருந்து நிலைய கடை எண்.22ஐ திருமதி.த.ராணி என்பவரால் குத்தகை எடுத்து கடை நடத்தி வரப்பெற்றுள்ளது. மேற்படி, கடையினை தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தொடர்ந்து நடத்த இயலவில்லை என்றும் திரு.அ.ஹாஜாமைதீன் என்பவருக்கு அரசாணைப்படி பெயர் மாற்றம் செய்து கொள்ளவும் விண்ணப்பம் தந்துள்ளார். அதன்படி, திரு.அ.ஹாஜாமைதீன் என்பவரும் தனது பெயரில் கடையினை பெயர்மாற்றம் செய்து தரும்படி விண்ணப்பம் தந்துள்ளார். எனவே, மேற்கண்டுள்ள கடையினை பெயர்மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>அரசாணை (நிலை) எண்.92, நாள்.03.07.2007ல் தெரிவித்துள்ளவாறு அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில் ஒருமுறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமையை அவர்களுடைய பெயரில் மாற்றித்தரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பெயர்மாற்றம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 13.01.2021 | 20 | <u>பொருள் எண். 20</u><br>இந்நகராட்சி பேருந்து நிலைய கடை எண்.03ஐ திரு.ராஜேந்திரன் என்பவரால் குத்தகை எடுத்து கடை நடத்தி வரப்பெற்றுள்ளது. மேற்படி, கடையினை திரு.ராஜேந்திரன் என்பவர் இறந்துவிட்டார் காரணத்தால் மேற்படி கடையினை திரு.க.அதியமான் என்பவரும் தனது பெயரில் கடையினை மாற்றம் செய்து தரும்படி விண்ணப்பம் தந்துள்ளார். எனவே, மேற்கண்டுள்ளப்படி கடையினை பெயர் மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>அரசாணை (நிலை) எண்.92, நாள்.03.07.2007ல் தெரிவித்துள்ளவாறு அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில் ஒருமுறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமையை அவர்களுடைய பெயரில் மாற்றித்தரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பெயர்மாற்றம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 13.01.2021 | 21 | <u>பொருள் எண். 21</u><br>இந்நகராட்சி பேருந்து நிலைய கடை எண்.02ஐ திரு.S.சுப்புராயலு என்பவரால் குத்தகை எடுத்து கடை நடத்தி வரப்பெற்றுள்ளது. மேற்படி, கடையினை எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தொடர்ந்து நடத்த இயலவில்லை என்றும், திரு.R.சரவணன் என்பவருக்கு அரசாணைப்படி பெயர் மாற்றம் செய்து கொள்ளவும் விண்ணப்பம் தந்துள்ளார். அதன்படி, திரு.S.சரவணன் என்பவரும் தனது பெயரில் கடையினை பெயர் மாற்றம் செய்து தரும்படி விண்ணப்பம் தந்துள்ளார். எனவே, மேற்கண்டுள்ளப்படி கடையினை பெயர் மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>அரசாணை (நிலை) எண்.92, நாள்.03.07.2007ல் தெரிவித்துள்ளவாறு அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில் ஒருமுறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமையை அவர்களுடைய பெயரில் மாற்றித்தரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பெயர்மாற்றம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம். | அனுமதிக்கப் பட்டது |